सत्यमेव जयते

**புதுச்சேரி அரசு**
**மாவட்டத் தொழில் மையம்**
**தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 9**

**எண். :** P-11/8/2025-O/o FM DIC PDY **புதுச்சேரி, நாள்** 12 JAN 20

## அறிக்கை

## 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாநில கைவினை கலை விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

புதுச்சேரி அரசு மாவட்டத் தொழில் மையத்தின் மூலம், பாரம்பரிய கைவினைப் கலையில் நீண்டகாலமாக தொடர்ந்து ஈடுபட்டு தமது சிறந்த திறமையால் இந்தத் துறையில் முக்கிய பங்களிப்பு செய்துள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாநில கைவினைக்கலை விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் நோக்கம், கைவினை கலையில் சிறந்து விளங்குவதற்கும், கைவினைப் பொருட்களின் வளர்ச்சிக்கும் மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கிய கைவினைக் கலைஞர்களுக்கு (Master Craftsmen) அங்கீகாரம் அளிப்பதாகும். வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் இந்த விருது, நமது பழமையான கைவினை மரபுகளையும், கைவினைத் திறனையும் பாதுகாப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கிறது. மேலும், இது போன்ற கைவினைஞர்கள் தங்களின் பணியைத் தொடர ஒரு ஊக்கத்தொகையாக அமைவதோடு மட்டுமல்லாமல், இவ்விருதைப் பெற முயற்சிக்கும் மற்றவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகவும் அமைகிறது.

**தகுதிகள் :**

- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- கைவினைஞர், இந்திய அரசின் கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையர் (Development Commissioner - Handicrafts) வழங்கிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.
- குறைந்தது 20 ஆண்டுகள் தொடர்ச்சியான அனுபவம் கொண்டவராகவும், 30 வயதுக்குக் குறையாதவராகவும் இருக்க வேண்டும். (அனுபவமானது, இந்திய

Information Technology

அரசின் கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையர் அலுவலகம் வழங்கிய அடையாள அட்டையின் அடிப்படையில் கணக்கிடப்படும்).

- ஏற்கனவே மாநில விருது (State Award) பெற்ற எந்தவொரு கைவினைஞரும், அதே கைவினைத் தொழிலுக்காக மீண்டும் ஒருமுறை மாநில விருது பெறத் தகுதியற்றவர் ஆவார்.

**விருதுகளின் எண்ணிக்கை: ஒவ்வொரு ஆண்டும் 5 நபர்களுக்கு.**

**ஒவ்வொரு மாநில விருதும் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:**

1. **ரூ. 50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **ரொக்கப் பரிசு**
2. **தாமிரபத்திரம் மற்றும் அங்கவஸ்திரம்**
3. **சான்றிதழ்**

**குறிப்பு:** விண்ணப்பப் படிவத்தை மாவட்ட தொழில் மையத்தில் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தை முறையாக நிரப்பி அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் விருதுக்கான கைவினை படைப்பும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: <u>16-02-2026</u>.**

மேலும் விபரங்களுக்கு/தொடர்புக்கு

Phone No: 0413 - 2248391/2249392
Website: dic.py.gov.in

**(கா.கோவிந்தராஜன்)**
**பொது மேலாளர்**
**மாவட்டத் தொழில் மையம்**
**புதுச்சேரி.**